

ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், கவுண்டச்சிபாளையம் ஊராட்சி, வள்ளிபுரத்தான்பாளையம் பிரிவிலிருந்து ராசாம்பாளையம் வரை முதலமைச்சர் கிராமசாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தார்ச்சாலை அமைக்கும் பணியினை வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்தார். நிகழ்வில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், சென்னிமலை ஒன்றிய கழகச் செயலாளர் செங்கோட்டையன், சென்னிமலை பேரூராட்சி பெருந்தலைவர் காயத்ரி இளங்கோ, திட்ட இயக்குனர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) பிரியா உள்ளிட்ட பலர் உள்ளனர்.




சேலம் மத்திய மாவட்டம் காடையாம்பட்டி கிழக்கு ஒன்றியத்தில். முதலமைச்சரின் ஓரணியில் தமிழ்நாடு தீவிர கழக உறுப்பினர். சேர்க்கை குறித்து மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் இரா.இராஜேந்திரன் ஆய்வு செய்து தீவிரமாக பணியாற்றி உறுப்பினர்களை சேர்க்க ஆலோசனை வழங்கினார். உடன் மாவட்ட கழக பொருளாளர் மு.கார்த்திகேயன், ஓமலூர் தொகுதி பொறுப்பாளர் ஈ.ஜி.சுகவனம், ஒன்றிய செயலாளர் கே.சி.அறிவழகன் பேரூர் கழக செயலாளர் கே.ஆர்.பிரபாகரன் மற்றும் நிர்வாகிகள் இருந்தனர்.

### பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில்

# பெரம்பலூர் மாவட்டத்தில் 3 புதிய வழித்தடங்களில் பேருந்து சேவைகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்து பேருந்தில் பயணித்தார்!

பெரம்பலூர், ஜூலை 18 - போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் அரியலூர் முதல் சென்னை வரை புதிய வழித்தடத்திலான பேருந்து சேவையினை வயலப்பாடியிலிருந்தும், குன்னம் முதல் சென்னை வரை புதிய வழித்தடத்திலான பேருந்து சேவையினை வேப்பூரிலிருந்தும், விடியல் பயணம் திட்டத்தின் கீழ் லெப்பைக்குடிகாடு முதல் பெரம்பலூர் வரை மகளிர்களுக்கான இலவச பேருந்து பயண சேவையினை லெப்பைக்குடிக்காடு சந்தைத் திடல் பகுதியிலிருந்தும் கொடியசைத்து தொடக்கி வைத்தார்.

இதில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது :

மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்துவதில் இந்தியாவிற்கே முன்னோடி முதலமைச்சராக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திகழ்கின்றார். நமது மாநிலத்தில் செயல்படுத்தப்படும் மக்கள் நலத்திட்டங்களைப் பார்த்து அண்டை மாநிலங்களும், வெளிநாடுகளும் செயல்படுத்தி வருவது மிகவும் பெருமைக்குரியதாகும். தமிழ்நாட்டுப் பெண்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் அடையச்செய்யும் உயர்ந்த நோக்கத்தோடு முதலமைச்சர் அவர்கள் மகளிருக்கான விடியல் பேருந்து பயண திட்டத்தை செயல்படுத்தி உள்ளார்கள். ஏழை எளிய மக்களின் போக்குவரத்து செலவினை குறைக்கும் வகையில் நமது மாநிலத்தில் இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்படுகின்றது.

அதனடிப்படையில், அரியலூர் முதல் வேப்பூர், வயலப்பாடி, லெப்பைக்குடிக்காடு வழியாக சென்னை மாதவரம் வரை செல்லும் வகையில் புதிய வழித்தடத்திலான பேருந்து சேவை, குன்னம் முதல் நமங்குணம், வயலப்பாடி, வேள்விமங்கலம், அங்கனூர், அகரம் சீகூர் வழியாக சென்னை மாதவரம் வரை செல்லும் வகையில் புதிய வழித்தடத்திலான பேருந்து சேவை, விடியல் பயணம் திட்டத்தின் கீழ் பெரம்பலூர் முதல் வாலிகண்டபுரம் சின்னாறு தொழுதூர் வழியாக லப்பைக்குடிக்காடு வரை செல்லும் மகளிர்களுக்கான இலவச பேருந்து பயண சேவை என மூன்று வழித்தடங்களுக்கும் புதிய பேருந்து சேவை இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சிகளில் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கும்பகோணம் துணை மேலாளர் (தொழில்நுட்பம்) புகழேந்தி ராஜ், கோட்ட மேலாளர் ராம்குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் தி.மதியழகன், சி. ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர் அழகு.நீலமேகம், பொதுக்குழு உறுப்பினர் பட்டுச்செல்வி ராஜேந்திரன், பேரூர் கழக செயலாளர் ஏ.எஸ்.ஜாகிர் உசேன், அயலக அணி மாவட்ட அமைப்பாளர் எ.ரசூல்அகமது மற்றும் கிளை மேலாளர்கள், போக்குவரத்துத்துறை பணியாளர்கள், மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### பெரம்பலூர் மாவட்டத்தில்

# 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட சிறப்பு முகாம்! அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

## மாவட்ட ஆட்சியர் ச.அருண்ராஜ் – ம.பிரபாகரன் பங்கேற்பு!

பெரம்பலூர், ஜூலை 18- தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் கடலூர் மாவட்டம், சிதம்பரம் வாண்டையார் திருமண மண்டபத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் மூலம் தமிழகம் முழுவதும் நடைபெறவுள்ள சிறப்பு முகாம்களை தொடங்கி வைத்து, துறை சார்ந்த அரங்கில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு, பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்ட நிகழ்ச்சியினை தொடர்ந்து நகர்ப்புறத்தில் பெரம்பலூர் நகராட்சிக்கு உட்பட்ட என்.எஸ்.கே மஹாலிலும், ஊரக பகுதிகளுக்காக வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சித்தளி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பொதுமக்கள் காணும் வகையில் நேரலை ஒளிபரப்பு செய்யப்பட்டது. இந்நிகழ்வினை ஏராளமான பொதுமக்கள் காணொளி காட்சி வாயிலாக நேரலையில் பார்வையிட்டனர்.

உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் சித்தளி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் நடைபெற்ற ஊரகப் பகுதிகளுக்கான சிறப்பு முகாமினை போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் முகாமில் துறை சார்ந்த அரங்கில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு, மனுக்களை விரைந்து பதிவு செய்திட தொடர்புடைய அலுவலர்களுக்கு அனுப்பிட அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு அரசின் சேவைகள் அனைத்து தரப்பு பொதுமக்களுக்கு விரைவாகவும், எளிதாகவும் கிடைத்திடும் வகையில் "உங்களுடன் ஸ்டாலின்" என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்கள். உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நகர்ப்புறம், ஊரகப் பகுதிகளில் 10,000 முகாம்கள் நடத்தப்படவுள்ளது. இதில் பெரம்பலூர் மாவட்டத்தில் நகர் மற்றும் கிராமப்புறத்தில் 86 முகாம்கள் நடைபெறவுள்ளது.

இம்முகாம் தொடர்பாக தன்னார்வலர்களும் மகளிர் சுய உதவிக்குழுக்களும் ஒவ்வொரு வீட்டிற்கும் நேரடியாகச் சென்று முகாம் நடைபெறும் நாள், இடம் குறித்த விவரங்களை வழங்கி பல்வேறு அரசுத்துறைகளின் திட்டங்கள் மற்றும் சேவைகளை விவரித்துள்ளனர். பெரம்பலூர் மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ், முதற்கட்டமாக 08 முகாம்கள் 15.07.2025 அன்று (செவ்வாய் கிழமை) முதல் 18.07.2025 (வெள்ளிக்கிழமை) வரை நடைபெற உள்ளது. இச்சிறப்பு முகாம்கள் காலை 09.00 மணியிலிருந்து மதியம் 03.00 வரை நடைபெறும்.

#### முகாம்களை மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்!

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, எரிசக்தி துறை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை, கால்நடை பராமரிப்பு பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, வேளாண்மை உழவர் நலத்துறை மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத் துறை ஆகிய துறைகளின் சார்பில் 46 வகையான சேவைகள் இந்த முகாம்களின் மூலம் வழங்கப்பட உள்ளது. பொதுமக்கள் இந்த சேவைகள் தொடர்பாக ஏதேனும் கோரிக்கைகள் இருந்தால் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் நடைபெறும் முகாம்களில் கோரிக்கை மனுக்களை வழங்கலாம். அவ்வாறு முகாம்களில் பெறப்படும் மனுக்களுக்கு 45 நாட்களுக்குள் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். எனவே பொதுமக்கள் தங்களது கோரிக்கைகள் தொடர்பாக இந்த சிறப்பு முகாம்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார்.

பின்னர் வருவாய்த் துறை, வேளாண்மை துறை, தோட்டக்கலைத்துறை, சுகாதாரத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை ஆகிய துறைகளின் கீழ் 25 பயனாளிகளுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் வழங்கினார்.

நகர்புறத்திற்கான உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் பெரம்பலூர் என்.எஸ்.கே திருமண மஹாலில் நடைபெற்றதை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.அருண்ராஜ்,பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் முன்னிலையில் துறை சார்ந்த அரங்கில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டார்.

மாற்றுத்திறனாளிகள் மனுக்கள் பதிவு செய்யப்படும் பகுதியினை பார்வையிட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அப்போது காதொலி கருவி வேண்டி திருமதி ஜெயசக்தி என்பவர் மனு அளித்தார். அம்மனுவின் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் முன்னிலையில் பயனாளிக்கு வழங்கினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் காதொலி கருவி பெற்ற பயனாளி திருமதி ஜெயசக்தி. திருமணம் ஆகி ஒரு மகனும் ஒரு மகளும் உள்ளதாகவும், அவரும் அவருடைய கணவரும் கூலி வேலை செய்து வருவாதாகவும், எனக்கு கடந்த 30 ஆண்டு காலமாக காது கேட்காமல் இருந்ததாகவும், இதனால் தனது அன்றாட வாழ்வில் மிகவும் சிரமப்பட்டு வந்ததாகவும் இது நாள் வரை அரசின் மூலமாக காதொலி கருவி வழங்கப்படும் என்ற ஒரு தகவல் தெரியாமல் இருந்ததாக தெரிவித்தார். இந்த சமயத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் சிறப்பு முகாம் பெரம்பலூர் என்.எஸ்.கே மஹாலில் நடைபெற உள்ளதாக தெரிந்து கொண்டு மனு அளிக்க வந்ததாகவும், மனு அளித்த மறு நிமிடமே மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் புதிய காதொலி கருவி வழங்கப்பட்டதாகவும், 30 ஆண்டுகளாக கேட்காத காதுகள் இன்று மாவட்ட ஆட்சியர் வழங்கிய காதொலி கருவியினால் கேட்க முடிந்ததாகவும், இன்று முதல் அனைவரும் போல தம்மாலும் இசை, உரையாடல் கேட்க முடியும் என்றும், இந்த உதவியை உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் உடனடியாக கிடைக்க உதவிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் முன்னிலையில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்முகாமில் வருவாய்த் துறை, வேளாண்மை துறை, சுகாதாரத்துறை, தொழிலாளர் நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, தாட்கோ, சமூக நலத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் கீழ் 32 பயனாளிகளுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் முன்னிலையில் வழங்கினார்.

இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் .ச.அருண்ராஜ் தலைமையில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல் பிரபு, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சு.தேவநாதன், பெரம்பலூர் நகர்மன்ற தலைவர் திருமதி அம்பிகா ராஜேந்திரன், சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் சொர்ணராஜ், பெரம்பலூர் நகர்மன்ற துணைத்தலைவர் து.ஆதவன், நகராட்சி ஆணையாளர் ராமர் உள்ளிட்ட அனைத்து துறை முதல் நிலை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை, கந்தக்கோட்டம்,

# முத்துகுமாரசுவாமி திருக்கோயில் குடமுழுக்கு!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பங்கேற்பு!

சென்னை, ஜூலை 18- இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று முன்தினம் (16.07.2025) சென்னை, பூங்காநகர், கந்தக்கோட்டம், முத்துகுமாரசுவாமி திருக்கோயில் குடமுழுக்கு பெருவிழாவில் பங்கேற்று சிறப்பித்தார்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், ஆகம விதிகளின்படி குடமுழுக்கு நடைபெற்று 12 ஆண்டுகள் முடிவுற்றபின், திருப்பணிகள் மேற்கொள்ளப்படாத திருக்கோயில்களை கண்டறிந்து குடமுழுக்கு நடத்துதல், திருத்தேர் மற்றும் திருக்குளங்களை சீரமைத்தல், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில் நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்தல் போன்ற பல்வேறு பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

சென்னை, பூங்காநகர், முத்துகுமாரசுவாமி திருக்கோயில் 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையான திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு கடந்த 15.07.2013 அன்று குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. திருக்கோயில் நிதி மற்றும் உபயதாரர் நிதி ரூ.91.50 இலட்சம் மதிப்பில் திருக்கோயில் இராஜகோபுரம், அனைத்து சன்னதிகள், மண்டபங்கள் புனரமைக்கப்பட்டன. இதனை தொடர்ந்து, கடந்த 10ஆம் தேதி விக்னேஸ்வர பூஜையுடன் தொடங்கிய யாக சாலை பூஜைகள் நேற்று முன்தினம் (16.07.2025) நடைபெற்ற ஆறாம் கட்ட யாகசாலை பூஜையில் மகா பூர்ணாஹுதிக்கு பின், கடங்கள் புறப்பட்டு, இராஜகோபுரம் மற்றும் அனைத்து விமானங்களுக்கும் புனிதநீர் ஊற்றி குடமுழுக்கு வெகு விமரிசையாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டார்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், இன்று வரை 3,386 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றுள்ளன. அதில் 131 திருக்கோயில்கள் முருகன் திருக்கோயில்களாகும்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, சென்னை இணை மண்டல இணை ஆணையர் திருமதி ஜ.முல்லை, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க , கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்திலிருந்து வலது மற்றும் இடதுபுற பிரதான கால்வாய்களில் 9,012 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும் வகையில் 120 நாட்களுக்கு முதல் போக விவசாய பாசனத்திற்காக தண்ணீரை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் ஆகியோர் மலர் தூவி, திறந்து வைத்தனர். உடன் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் டேம்.வெங்கடேசன், மாவட்ட துணைச் செயலாளர் சாவித்திரி, கடலரசு, மூர்த்தி, ஒன்றியச் செயலாளர்கள் கோவிந்தன், தனசேகரன், நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம், வேல்மணி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### வில்லியனூர் தொகுதியில்

# ரூ.34 லட்சம் செலவில் வளர்ச்சிப் பணிகள்!

## புதுவை எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா தொடங்கி வைத்தார்!

புதுச்சேரி, ஜூலை 18- புதுச்சேரி மாநிலம், வில்லியனூர் சட்டமன்ற தொகுதியில் வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து மூலம் சாலைகள், கழிவுநீர் வாய்க்கால்கள் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சிப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அதன் ஒரு பகுதியாக வில்லியனூர் தொகுதிக்கு உட்பட்ட திருவள்ளுவர் நகர் விரிவாக்கம் பகுதியில் ரூ. 19 லட்சத்து 37 ஆயிரம் மதிப்பீட்டில் பக்கவாட்டு கழிவு நீர் வாய்க்கால் உடன் கூடிய தார் சாலை மற்றும் ரமேஷ் நகர் மற்றும் ஆதீஷ்வரா நகர் ஆகிய பகுதிகளில் ரூ. 14 லட்சத்து 56 ஆயிரம் மதிப்பீட்டில் மண் சாலை அமைக்கும் பணிகளுக்கான நிகழ்ச்சி நேற்று காலை நடைபெற்றது.

இதில், தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா கலந்து கொண்டு, சாலைகள் அமைக்கும் பணியை தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சிகளில், வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் ரமேஷ், இளநிலைப் பொறியாளர் சத்தியநாராயணா, திருவள்ளுவர் நகர் ஊர் முக்கியஸ்தர்கள் சூசைராஜ், சிவபாலன், ஜேசப்பா, சண்முகம், ரவிச்சந்திரன், தனஞ்செழியன், சௌரிராஜன், இருதயராஜ், மந்திரி குமார், ஜரம், கிருஷ்ணராஜ், வெண்ணிலா, தாமஸ், கமல்ராஜ், கிஷோர், செல்வ லிங்கம், சுகுமாரன், ரமேஷ் நகர் மற்றும் ஆதீசுவரார் நகர் பூமி பூஜையில் கலந்து கொண்ட ஊர் முக்கியஸ்தர்கள் சரவணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் கறம்பக்குடி தெற்கு ஒன்றியம் கருக்காக்குறிச்சி திருச்செல்வம் அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கருதெற்குதெரு பிள்ளையார் கோவில் திடலில் நடைபெற்ற மாபெரும் மின்னொளி கபாடி போட்டியின் இறுதி ஆட்டத்தை மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் துவக்கி வைத்தார். நிகழ்வில் கறம்பக்குடி தெற்கு ஒன்றிய செயலாளர் தவ.பாஞ்சாலன், மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.எஸ்.கருப்பையா, புதுக்கோட்டை வடக்கு ஒன்றியச் செயலாளர் ஆர்.ஆர்.சாமிநாதன், கறம்பக்குடி பேரூர் இளைஞரணி அமைப்பாளர் பரூக் உள்ளிட்ட கழக நிர்வாகிகள்,மாவீரன் திருச்செல்வம் விளையாட்டு கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக பங்கேற்றனர்.